செ.வெ.எண் - 32 நாள்: 11-09-2017

பத்திரிக்கை செய்தி

## "நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்"

## கிராம மானாவாரி விவசாயிகள் குழு கூட்டம் நடத்துதல்

தமிழக அரசு மானாவாரி விவசாயிகளின் மேம்பாட்டிற்காக ரூ.802.90 கோடி செலவில் "நீடித்த மானாவாரி விவசாயத்திறகான இயக்கம்" என்னும் மாபொரும் திட்டத்தினை 2016-17 ஆம் ஆண்டு தொடங்கி 2019-20 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தொகுப்புக்கு 1000 எக்டர் வீதம் 1000 தொகுப்புகளில், கிராம மானாவாரி விவசாய பகுதி மேம்பாட்டிற்காக மழை நீர் சேகரிப்புகள் அமைத்தல், கோடை உழவு செய்தல் 50 சத மானியத்தில் விதைகள், நுண்ணுயிர்கள், நுண் சத்துக்கள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் இயந்திர வாடகை மையம் அமைத்தல் மற்றும் கால்நடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நடப்பு 2017-18 ஆம் ஆண்டு நமது மாவட்டத்தில் 5 மானாவாரி தொகுப்புகளில் 45 மானாவாரி விவசாய குழுக்கள் அமைக்கப்பட்டு 12,500 ஏக்கர் மானாவாரி நிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் செவ்வனே செயல்படுத்த **மானாவாரி விவசாய குழுக்கள் கூட்டம் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது செவ்வாய் கிழமை அன்று நடைபெறும்** கூட்டத்தில் மானாவாரி குழு விவசாயிக்ள **கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிகளை விவாதித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

- உழவு மானியமாக தொகுப்பில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.500/- பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது. உழவு மேற்கொண்ட விவசாயிக்ள பட்டியல் மானியம் பெற பரிந்துரைக்க வேண்டும்.
- நுழைவுப் பணிக்காக **ரூ.5 இலட்சம்** தொகுப்பிற்கு வழங்கப்படுகிறது. விவசாயிகள் கிராமத்திற்கு தேவையான பொதுவான மழைநீர் சேகரிப்பு அமைப்புகளான தடுப்பணை கட்டுதல், கசிவு நீர் குட்டைகள் அமைததல பணிகளை பரிந்துரை செய்யலாம்.
- மானாவாரி சாகுபடிக்காக **50%** மானிய விலையில் விதைகள், உயிர் உரங்கள், நுணசத்து உரங்கள் வழங்கப்படுகிறது. வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் இந்த மானியத்தை நேரடியாகவும், வேளாண்மை விரிவாக்க மையத்தில் இடுபொருட்கள் இல்லாதபட்சத்தில் தனியார்/கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பெற்று

அதற்கான பட்டியலை தொகுப்பு மேம்பாட்டுக் குழுவிடம் பரிந்துரை செய்து பின்னேற்பு மானியமாக பெறலாம்.

- உயிர் உரங்கள் விதை நேர்த்தி செய்து விதைப்பு செய்தல் வேண்டும். இதனால் பயிர்கள் வேர் வளர்ச்சி அதிகமாக இருக்கும். வறட்சியையும் தாங்கி வளரும். இதனை அனைத்து விவசாயிகளும் கடைப்பிடித்திட பரிந்துரைக்க வேண்டும்.
- மழை நீர் சேகரிப்புக்காக மானாவாரி தொகுப்பு ஒன்றுக்கு **ரூ.7.5 இலட்சம்** நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை விவசாயிகள் நன்முறையில் பயன்படுத்தி தொகுப்பிற்கு தேவையான கசிவு நீர் குட்டைகள், தடுப்பணைகள் அமைத்துக் கொள்ளலாம்.
- விளைபொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்திட தேவையான சிறுதானியங்கள் பதனிடும் இயந்திரம், பருப்பு உடைக்கு இயந்திரம், தரம் பிரிக்கும் இயந்திரம், எண்ணெய் பிழியும் இயந்திரம், சிப்பமிடும் இயந்திரங்கள் வாங்கிட தொகுப்பிற்கான கூட்டுறவு சங்கத்திற்கு **ரூ.4 இலட்சம்** மற்றும் விவசாய குழுக்களுக்கு **ரூ.6 இலட்சம்** வழங்கப்படுகிறது. விவசாயிகள் தொகுப்புக்கு தேவையான மதிப்புக்கூட்டும் இயந்திரங்களை விவாதித்து வாங்கி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- கால்நடை பராமரிப்பிற்கு தேவையான தாது உப்புகள், இனபெருக்க குறைபாடு நிவர்த்தி, மடிவீக்க நோய் சிகிச்சை கால்நடை பராமரிப்பு துறை மூலம் ஒவ்வொரு தொகுப்பிலும் செயல்படுத்தப்படுகிறது. இதனை தொகுப்பிலுள்ள விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாவட்ட ஆட்சியர்
திருநெல்வேலி மாவட்டம்.

11/9/17
PAC

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி.